[1986 நவம்பர் 21

வேலையற்ற படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடனுதவி.

142—(*வினா எண் 7494)—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 25,000 கடன் உதவி எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது ?

(ஆ) இதில் எஸ்.எஸ்.எல்.சி. தவறியவர்களையும் சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் 1983–84-ஆம் ஆண்டில் 22,162 நபர்களுக்கும், 1984–85 ஆண்டில் 22,500 நபர்களுக்கும் கடன்கள் வழங்கப் பட்டுள்ளன. 1985–86-ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்தின் கீழ் 18,100 நபர்களுக்கு கடன்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டு, இந்த இலக்கு மிஞ்சப்பட்டு 18,722 நபர்களுக்கு கடன் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டம் மத்திய அரசினால் தயாரிக்கப்பட்டதாகும். இத்திட்டம் இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுக்குமான ஒரு பொதுத் திட்டம், இத்திட்டத்தின்படி உதவிபெற குறைந்த பட்சம் எஸ்.எஸ்.எல்.சி. தேறியிருக்க வேண்டும் என்று மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. எஸ். எஸ். எல். சி. தவறியவர்களையும் இத்திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ள மத்திய அரசு ஆணை ஏதும் வழங்கவில்லை.

(முற்பகல் 10–10)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தை இந்தியத் திருநாட்டுக்கே மத்திய அரசு வழங்கியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் சென்னை மாநகரத்திலே இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட வில்லை. இப்படி ஒதுக்கப்பட்ட நிலைக்கு என்ன காரணம்? சென்னை மாநகரத்திற்கு இந்த சுய வேலை வாய்ப்பின் கீழ் கடன் வழங்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

1986 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசின் இந்தத் திட்டம் அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவான ஒன்று என்ற காரணத்தால் 1981—ஆம் ஆண்டு மக்கள் கணக்குப்படி 10 இலட்சம் பேர்களுக்கு மேல் உள்ள நகரங்களுக்கு இது பொருந்தாது என மைய அரசு ஆணையிட்டுள்ளது. ஆகவே சென்னை, அந்த வகையில் பொருந்தவில்லை.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுய வேலை வாய்ப்பின் கீழ் வழங்கபடும் தொகையை அதிகரிக்கச் செய்யவும், எஸ்.எஸ்.எல்.சி. தவறியவர்களுக்கும் இந்தக் கடன் உதவி கிடைக்கின்ற வகையில் மைய அரசுக்கு, மாநில அரசு பரிந்துரை செய்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கும்.

ஆற்காடு வட்டம், திமிரி ஒன்றியம், வேம்பி கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு ஆரம்பப் பாடசாலை.

143—(*வினா எண் 9342)—திரு. த. பழனி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டம், திமிரி ஒன்றியம், வேம்பி கிராமத்தில் ஆதி திராவிட ஆரம்பப் பாடசாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு வட்டம், திமிரி ஒன்றியம், வேம்பி கிராமத்தில் ஆதி திராவிடர் நலத்துறையினால் ஆதி திராவிடர் ஆரம்பப் பாடசாலை ஏற்படுத்துவது அரசின் செயற் குறிப்பில் இல்லை.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் ஆதி திராவிடத் துறையால் நடத்தப்படுகின்ற ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை இருக்கின்றன? அதற்காக அரசு செலவிடுகின்ற தொகை எவ்வளவு? அதிலே எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள்? எத்தனை மாணவர் விடுதிகள் நடத்தப்படுகின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.